திரு.-கொச்சி மந்திரி சபை கவிழும்?

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடிமீ 1௳ வெள்ளி (16—7—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடிமீ 2௳ சனி (17 7 -54) | இதழ்: 28

அமைச்சர் குழு—காங். குழு கருத்துவேற்றுமை!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குக் கம்யூனிஸ்டு கட்சி முயற்சி!

தமிழர் காங்கிரஸ் போராட்ட எதிரொலி

(நமது அரசியல் நிருபர்)

18 சட்ட சபை உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் சோஷலிஸ்டு கட்சி, 117 உறுப்பினர்களைக் கொண்ட திரு—கொச்சியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது

காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்பை நம்பித்தான், சிறுபான்மையாக இருந்தும், ம. சோ. கட்சி பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தது.

முதல் சட்ட சபைக் கூட்டம் ஏற்கனவே நடந்துவிட்டது. இப்பொழுது இரண்டாவது சட்ட சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இக்கூட்டத்திலேயே, ம. சோ. கட்சி மந்திரி சபை கவிழ்ந்து விடுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி விட்டன.

கம்யூனிஸ்டு கட்சி கண்காணிப்பில் தேர்தல் காலத்தில் உருவாக்கப்பட்ட கூட்டு முன்னணியிலிருந்து, ம. சோ. கட்சி விலகிக் கொண்டு அமைச்சர் குழு அமைத்தது முதல், அதன் பரம விரோதியாக கம்யூனிஸ்டு கட்சி மாறி விட்டது.

இப்பொழுது கூட்டு முன்னணியில் கம்யூனிஸ்டு கட்சியினரும், கேரள சோஷலிஸ்டு கட்சியினருமாகச் சேர்ந்து மொத்தத்தில் 30 சட்ட சபை உறுப்பினர் உள்ளனர்.

அதே முன்னணியில் இருந்துவந்த புரட்சி சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த 9 சட்ட சபை உறுப்பினர்கள் அம்முன்னணியை விட்டு விலகி, நடைபெற்றுவரும் சட்ட சபைக் கூட்டத்தில் தனி வரிசையில் இடம் பெற்றுள்ளனர்.

ஆட்சியை நிலையாக நடத்திச் செல்வதற்கான ஒரு உறவு முறையை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ள காங்கிரஸ் மேலிடமும். ம. சோ. கட்சி மேலிடமும் டெல்லியில் சமீபத்தில் கலந்து பேசியது. அந்தப் பேச்சு வார்த்தைகளில் நிலையான ஏற்பாடு எதுவும் உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பேச்சின் துவக்கத்தில் மட்டற்ற நம்பிக்கை இருந்தபோதிலும், அது நீடித்து இருக்கவில்லை.

காங்கிரஸ் கட்சியுடன் உறவு கொள்வதற்கான வழி காணும் முயற்சியில் திரு—கொச்சி ம. சோ. கட்சி செயற்குழுவிற்கும், ம. சோ. கட்சியின் மேலிடத்திற்குமே கருத்து பிளவு ஏற்பட்டு விட்டது. முதல் மந்திரியாக

(4-ம் பக்கம் பார்க்க)

சூயசிலிருந்து வெளியேற சர்ச்சில் துடி துடிப்பு!

சாம்ராஜ்ய மூடுவிழா தன் காலத்தில் கூடாது என்றவரின் மனமாற்றம்

அவர் போக்கினால் கட்சிக்குள் பிளவு?

லண்டன், ஜூலை 15—

"பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் இராணுவக் கமிட்டியின் தனிக் கூட்டமொன்றில் பிரிட்டிஷ் பிரதமரும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவருமான சர்ச்சில், 'சூயஸ்கால்வாயைவிட்டு பிரிட்டன் வெளியேறும் காலம் வந்துவிட்டது' என்று கூறினாராம்.

காப்டன் வாட்டர் ஹவுஸ் என்பவரின் தலைமையில் உள்ள கன்சர்வேடிவ் இடதுசாரிகள் 40 பேர், சூயசிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறும் எந்த ஒப்பந்தத்தையும் எதிர்க்கிறார்கள். சரியான முறையில், சர்ச்சில் அவர்களுக்கு சூயஸ் பிரச்சினையில் பதில் அளிக்காவிட்டால், இந்த நாற்பது பேர்களும் சர்க்காருக்கு எதிராக வாக்களிப்பது என்று முடிவு செய்தார்கள் என்று தெரிகிறது.

எகிப்திலும் சூடானிலும் சர்ச்சில் கையாளும் கொள்கையை எதிர்த்து பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினரான கன்சர்வேடிவ் கட்சி அங்கத்தினர் ஒருவர் கட்சியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

கன்சர்வேடிவ் கட்சியில் உள்ள கிளர்ச்சி மனப்பான்மை கொண்டோருக்கு இச்செய்கை ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

கட்சிக் கூட்டத்தில் சூயஸ் பிரச்சினை பற்றி பலத்த விவாதம் இருந்ததாம். அக்கூட்டத்தில் பேசிய சர்ச்சில், ஈடன் ஆகியோரின் சொற்பொழிவுகள் வெளியிடப்படவில்லை.

பிரிட்டனின் கௌரவம் பாதிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்கையில் சர்ச்சில், 'முட்டாள் தனத்துடன் கௌரவத்தையும் காப்பாற்ற இயலாது' என்று கூறினார்.

கட்சியிலிருந்து ராஜினாமா செய்த இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினரான மேஜர் லெகபுருக், காமன்சில், சுயேச்சையாகத்தான் உட்காரப்போவதாக கூறினார்.

'என்னுடைய இராஜினாமா சூயஸ் பிரச்சினையைப் பொறுத்ததுதான் என்றாலும் கன்சர்வேடிவ் கட்சியில் எனக்குள்ள கருத்து வேற்றுமை இன்னும் ஆழமானதாகும்," என்றும் குறிப்பிட்டார் அவர்.

"பாலஸ்தீன், பர்மா, இந்தியா, பர்சியா, சூடான்—இப்போது எகிப்து இப்படியாக இந்த அவமானகரமான வெளியேற்றம் தொடர்ந்து கொண்டே போகிறது" என்று அவர் மேலும் கூறினார்.

ஜூலை 15 வெற்றி விழாவில் போலீஸ் குறுக்கீடு!

இருவர் கைது! 1 வார சிறை!

சென்னை, ஜூலை 14—

சென்னை எழும்பூர் தி. மு. கழகச் (9-வது வட்டம்) சார்பில் ஜூலை 15 வெற்றி விழா நாளை கொண்டாட, தெருக்களில் எழுதிக் கொண்டிருந்த தோழர்கள் விநாயகம். ராமச்சந்திரன் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்து சென்னை நகர்க்காவல் கோர்ட்டுக்கு கொண்டுபோனார்கள் வழக்கை விசாரித்த மாஜிஸ்ட்ரேட் எம் சி. பி 75-வது பிரிவின் கீழ் குற்றம் சமத்தி இருவருக்கும் . லா 10 ரூபாய் அபராதம் விதித்து, கட்டத் தவறினால் ஒரு வார சிறைத் தண்டனையும் விதித்தார் தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தனர்

சென்னையில் ஜூலை 15 வெற்றி விழா

ஆயிரக்கணக்கில் தோழர்கள் அணி வகுத்துச் சென்ற ஊர்வலக் காட்சி

களிப்புக் கடலில் நீந்திய திராவிடர் பெருங்கூட்டம்

15—7—54 வியாழன் அன்று, சென்னையைச் சார்ந்த வட்டங்களில் எல்லாம் தி மு கழகத் தோழர்களால் வீதிகள் தோறும் கழகக் கொடிகளாலான தோரணங்களினாலும் கழக வெற்றிச் செய்திகளைக் கொண்ட விளம்பரத் தாள்களினாலும், அழகிய வண்ணத் தாள்களினாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

எல்லா வட்டகிளைக் கழக கட்டிடங்களிலும் காலையிலேயே புதிய கழகக் கொடிகளை ஏற்றி வைத்து, மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மாலை 4 மணிக்கு இராயபுரம் அறிவகத்திலிருந்து சென்னை மாவட்ட தி. மு கழக அமைச் செயலாளர் தோழர் வி. ராமசாமி அவர்களின் தலைமையில், ஊர்வலம் புறப்பட்டு சென்னையிலுள்ள முக்கிய வீதிவழியே சென்று, பொம்பூர் கான்ரான்ஸ்மித் மைதானத்தில் மாவட்ட கழகத்தாரால் நடத்தப்படும் கூட்டத்தில் முடிவுற்றது.

ஊர்வலம் செல்லச் செல்ல வழி நெடுகக் கும்பல் கும்பலாக கழகத் தோழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டு, கூட்டத்தை நெருங்கும் தறுவாயில் சுமார் ஆயிரமாயிரமாக எண்ணிக்கையில் பெருகிவிட்டனர். ஊர்வலத்தை வெற்றிகரமாக நடத்தித் தந்த தோழர்கள் அனைவருக்கும் வி. ராமசாமி அவர்கள் நன்றி கூறியபின், — மாவட்டச் செயலாளர் தோழர் கண்ணபிரான் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி, தோழர்களின் ஆர்வத்தைப் பாராட்டி தோழர் கே. ஏ மதியழகன் அவர்களை தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். அவ்சமயத்தில் திராவிடத்தின் இசைக் குயில் தோழியர் பி. என். செல்வா அவர்களால் இயக்கப் பாடல்கள் பாடப்பட்டது.

தலைவர் முன்னுரையில், மும்முனைப் போராட்டத்திலும் ஏற்பட்ட விளைவு -களையும்-கழகத்தின் போர்த்திறனைபற்றியும் விளக்கி தி. மு. கழக வீரர்களனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி அறப்போர் களத்தில்?

மறைந்த மாணிக்கங்கள்

சென்ற ஆண்டு ஜூலை 15ந் தேதி நடைபெற்ற ரயில் நிறுத்த அறப்போரில் தூத்துக்குடியில் ஆச்சாரியார் ஆட்சி விழுங்கிய நம் மாணிக்கங்கள்.

1. சீனிவாசம் பிள்ளை (வயது 53; கழகச் செயலாளர்) 2. உச்சிமாகாளி (22 வயதுள்ள இளந்தோழர்) 3 கணபதி, (20 கூட நிரம்பப் பெறாதவர்) 4 மந்திரம் நாடார்.

இவர்கள் நால்வரும் தொழிலாளர்களே. இவர்கள் ஊதியத்தை நம்பியே இவர்களின் குடும்பம் வாழ்ந்தது.

தூத்துக்குடி சதி வழக்கு

ஆகஸ்டு 30-ந் தேதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது

கடந்த ஆண்டு ஜூலை 15-ல் நடந்த போராட்டத்தில் தூத்துக்குடி தோழர்களுக்கு கிடைத்த பரிசு "சதிவழக்கு" அது இந்த ஆண்டு ஆகஸ்டு 30-ந் தேதி செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது.

விபரம் ஞாபகமிருக்கிறதா?

96 தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில், கீழ்க் கோர்ட்டில் 46 பேர் மீது வழக்கு தள்ளுபடியாகிவிட்டது; இன்னும் 50 தோழர்கள் மீது வழக்கு நடக்க இருக்கிறது; 50 தோழர்களில் 29 பேர் ஏற்கெனவே 10 மாதம் விசாரணைக் கைதிகளாகவே சிறையிலிருந்து 28—5—54-ந் தேதி ஜாமீனில் வந்திருக்கிறார்கள்; அவர்களில் நால்வர், "தூத்துக்குடி எல்லைக்குள்ளே பிரவேசிக்கக் கூடாது" என்னும் நிபந்தனை ஜாமீனில் இருக்கிறார்கள்.

கல்லக்குடி அறப்போர் களத்தில்?

உயிரை தாரைவார்த்த இரு உத்தமர்

திருச்சி சேவன்; லால்குடி நடராசன் (நெசவுத் தொழிலாளி) ஆகிய இருவரும் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாயினர்.

மேற்கூறிய இருவரும் இளைஞர்கள். லால்குடி நடராசன் தி. மு. கழகப் பற்றுடையவர். அவர் உழைப்பை நம்பியே அவர் குடும்பம் வாழ்ந்து வந்தது.

அவருக்கு, அண்மையில் திருமணம் முடிக்க, பெண் நிச்சயிக்கப்பட்டும் இருந்தது. அவருடைய மணக்கோலம் கண்டு மகிழ இருந்த பெற்றோர்களுக்கு, அவருடைய பிணக்கோலத்தைக் கண்டு வதையும் வாய்ப்பை, ஆச்சாரியார் ஆட்சி மனமுவந்து அளித்தது!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 16—7—54 வெள்ளி

போகிற போக்கில்....!

★

போகிற போக்கில் பெரும் பாராங்கல்லைத் தூக்கிக் கொண்டு ஓடுமாம் பேய்! இப்படிக் கூறிவோர் கல்லாரும், அவரை ஏய்த்துப் பொருள் பறித்திடும்பேயோட்டிகளும்!

இதே பேயின் போக்கில் உள்ளது, இந்தியத் திட்டுகளில் இட்லர் தர்பார் புரிந்து வரும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம்! இரைக்க இரைக்க ஓட வேண்டிய விநாடியை வெகு வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிற பிரெஞ்சு ஏகாதிபத்தியம், 'வெளியேறி விடுகிறேன்' என ஒரு சொல் கூறிவிட்டு, திராவிட மக்களின் வெறுப்புக்கு ஆளாகாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம்; ஆனால், அந்த நல்லறிவு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குத் துளியும் இருப்பதாகத் தெரியவில்லை.

உரிமைப் போராட்டத்தைப் பிரெஞ்சிந்திய திராவிடர்கள் தொடங்கி சுமார் மூன்று திங்களுக்கு மேல் ஆகிறது. கணிசமான நிலப்பரப்பும் விடுவிக்கப்பட்டு, நெட்டப்பாக்கம் எனும் சிற்றூரை தற்காலிகத் தலைமையாகக் கொண்டு, விடுதலை அரசாங்கம் இயங்கியும் வருகிறது. அதன் நிர்வாகம் ஒழுங்குடை நடைபெறுவதற்காக, ஒரு முன்னாள் கலெக்டரையும், டி.எஸ்.பி. ஒருவரையும் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக முன்னரே தகவல் தரப்பட்டு இருக்கிறது. அவர்களுடன், நீதி நிர்வாகத்தைத் திறம்பட கண்காணித்து வருவதற்காக, நீதித்துறையில் நீண்ட நாள் பதவியிலிருந்து பிரெஞ்சிந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய ஒருவரையும் நெட்டப்பாக்கம் விடுதலை சர்க்கார் நியமித்திருக்கிறதாம்.

அந்தத் தற்காலிக சர்க்காரின் நிர்வாகம் இனி ஓரளவிற்கு ஒழுங்காக நடைபெறக் கூடும் என நம்பிக்கைக் கொள்வதற்கு இடமுண்டு.

மக்களின் வாக்கு பலம் கொண்டு சட்டப்படி உருவாக்கப் பெற்றுள்ள குறிப்பிட்ட ஒரு சர்க்கார் மேற்கொள்ளும் செயல்களில் பல, எதிர்க்கட்சியின் கண்டனத்திற்கும் எதிர்ப்பிற்கும் பாத்திரமாவதை நாம் கண்டு வருகிறோம். அப்படி எதிர்ப்பு ஏற்படுவதில் உண்மையும் உண்டு; வெறும் கற்பனையும் உண்டு. எனவே, நெட்டப்பாக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற தற்காலிக சர்க்கார் நடவடிக்கைகள் அனைத்தும் பிழையற்றவை எனக் கூறி விடவும் முடியாது. அந்த சர்க்கார் மீது, அவ்வளவு நல்லெண்ணத்தைப் பெற முடியாது. அக்காரணத்தாலோ ஏமாற்றம் அடைந்துள்ள பிற அரசியல் கட்சியினர் சீறி விழுவதும், தூற்றி வழிவதும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும். இந்த,

ஜூலை 14-ம் நாள் பிரெஞ்சு மக்களுக்கு—ஏன்—மக்கள் குலத்துக்கே ஒரு புனிதமான நாளாகும்.

அன்றுதான், பிரான்சை ஆண்டுகொண்டிருந்த முறை தவறிய கொடுங்கோல் மன்னனின் எதேச்சாதிகாரத்தையும், அவனுக்குக் கட்டியங் கூறி காலங்கடத்தி வந்த கல்நெஞ்சர்களான நிலப் பிரபுக்களையும், மணல்மேடு சரிவது போல் சரியச் செய்து, பிரெஞ்சு மக்கள் விடுதலைப் பரணி பாடினர்.

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற மூன்று உயர்ந்த கோட்பாடுகளைக் காணிக்கையாக உலக மக்களுக்கு பிரெஞ்சு விடுதலை வீரர்கள் அளித்த வெற்றி நாளாகும்.

ஆனால், அதை மறந்து நடந்துகொண்டுள்ளனர், இன்றும் விடுபடாது எஞ்சியுள்ள இந்தியத் திட்டுகளில் பேயாட்டம் போட்டுவரும் பிரெஞ்சு அதிகார வெறியர்கள்!

உலக மக்களுக்கு, சுதந்திரத்தின் சிறப்பை உணர்த்திய புனிதமான விடுதலை விழா நாளான ஜூலை 14-ம் நாளை, பிரெஞ்சிந்தியாவில உள்ள பிரெஞ்சு அதிகார வெறியர்கள், விடுதலை முயற்சியை, வெட்டி வீழ்த்துவதற்குப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதுவும் ஏதோ ஒரு மதப் பண்டிகை நாளாகக் கருதி விட்டனர் அந்த அதிகாரிகள்!

அந்த நாளை ஒட்டி பிரெஞ்சிந்திய சர்க்கார் நடத்திய விழாவில், வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த இளைப்புக் கோரிக்கையினர் மீது தாக்குதல் நடத்தினராம் அந்த மதோன்மத்தர்கள்! அடிமை வியாபாரி, உரிமை பற்றி உபதேசம் செய்யக் கிளம்பினது போல் இருக்கிறது, இந்த அக்கிரமச் செயல்!

போலீஸ் தடியடிக்கு உள்ளானவர்களில் இரு இளைஞர்கள் குருதி கக்கினராம்! ஏறத்தாழ பன்னிரண்டு அறப்போர் வீரர்கள் அடிக்கப்பட்டு, வீதி வழி இழுத்துச் செல்லப்பட்டு, சிறைக்குள்ளே தள்ளப்பட்டனராம்!

கொடுமை! கொடுமை!

வெளியேறுகிற ஏகாதிபத்தியப் பேய் சாதாரணமாக வெளியேறக் கூடாதா? இத்தகு கொடுமையையும், குடிமக்களுக்கு இழைத்துவிட்டுத்தான் போகவேண்டுமா?

வங்காளப் பகுதியில் உள்ள சந்திரநாகூர் ஏற்கனவே கைவிடப்பட்டுவிட்டது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால்!

ஆந்திர பகுதியில் உள்ள ஏனாமும், பிரெஞ்சுத் தொடர்பை அறுத்துக் கொண்டுவிட்டது!

மலையாளப் பகுதியில் உள்ள மாகியை விட்டுவிடுவதற்கு, ஏகாதிபத்தியம் ஒப்பி இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது!

தமிழ் நாட்டில் உள்ள புதுவையும், காரைக்காலும்தான், பிரெஞ்சுப்பிடியில் இப்பொழுதும் இருந்து வருகின்றன!

புதுவை நகரைச் சுற்றியுள்ள பெரும் நிலப்பரப்பு விடுபட்டுவிட்டது!

புதுவையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதற்காக, அங்கு நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள கிடைத்தற்கரிய பொருட்களை எல்லாம் இரகசியமாகக் கடத்திவிட்டதாகவும் ஏற்கனவே தகவல் தரப்பட்டும் இருக்கிறது!

அதுவுமல்லாமல், விடுதலைபடைந்துள்ள புதுவை பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைத்துக்கொள்வதற்கு ஒப்புவதாகவும், புதுவை, காரைக்காலை மட்டும் தாங்களே வைத்துக்கொள்ள யூனியன் சர்க்கார் ஒப்புதல் தரவேண்டுமென பிரெஞ்சு சர்க்கார் விரும்புவதாகவும், மூன்று நாட்களுக்கு முன் ஒரு செய்தி தரப்பட்டும் உள்ளது!

இவ்வளவு சம்பவங்களும் எதைக் காட்டுகிறது? பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு இன்னமும் இந்தியத் திட்டுகளில் இருக்க உரிமை கிடைக்கும் என்பதையா? அல்லது அத்திட்டுகள் முழுதையும் விட்டுவிட்டு ஓட வேண்டிய காலம் பிறந்துவிட்டது என்பதையா?

நடைமுறையில் விளக்கமாகும் இந்த உண்மையை அறிந்து, பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள ஏகாதிபத்தியத்திற்கு ஏனோ நல்லெண்ணம் ஏற்படக் காணோம்?

நல்ல மனிதனுக்கு ஒரு சொல்; நல்ல மாட்டிற்கு ஒரு அடி! இந்த இரண்டு இனத்தையும் சேர்ந்ததாகக் காணோம், பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

தம்மைப் பற்றிய நிலையான கருத்தை என்றென்றைக்கும் பிரெஞ்சிந்திய மக்கள் மறக்காமல் இருக்கத்தான் வேண்டும் என்பதற்காகவே, வெளியேறுகிற பேய், தான் வெளியேறிவிட்டதை மெய்ப்பிப்பதற்காக பளுவான கல்லைத் தூக்கிச் செல்லும் எனக் கூறப்படுவது போல், புனிதமான ஜூலை 14-ல் இணைப்புக் கோரிக்கையினர்மீது தாக்குதல் நடத்தியது போலும், பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

விடுதலை விரும்பிகள் அடிபட்டாலும், குருதியைக் கொட்டினாலும், பாதகமில்லை; ஏகாதிபத்தியப் பேய் பிரெஞ்சிந்தியாவை விட்டுத் தொலைந்தால் போதும்! விடுதலை பெறுவதற்கு, அந்த அறப்போர் வீரர்கள் கொடுத்துள்ள விலை, உயர்வாக மதிக்கத்தக்கதானாலும், வரலாற்று ஏடுகளில் அது மலிந்து காணப்படும் ஒன்றாகும்.

உரிமை பெற, எதேச்சாதிகாரிகளின் தடியடிக்கு ஆளான, அறப்போர் தொண்டர்களை நாம் பாராட்டுகிறோம்! அவர்கள் உரிமைப் போர் விரைவில் வெற்றி பெறட்டும் என வாழ்த்துகிறோம்! வாழ்க வீரர்கள்! வெல்க, அவர் தம் உரிமைப் போர்!

டெல்லி அமைச்சரின் ஊதாரித்தனம்

— (:) —

இரு துணை அமைச்சர்களை அகற்றுமாறு பண்டிதர் குறிப்பு

டில்லி மாநில முதன் மந்திரியாகவும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் தொடர்ந்து பிரம்மப்பிரகாஷ் இருப்பதை காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு அனுமதித்திருக்கிறார்.

டில்லி போன்ற ஒரு சிறிய ராஜ்யத்திற்கு மூன்று மந்திரிகளும் இரு உதவி மந்திரிகளும் இருப்பது அதிகம். எனவே, இரண்டு உதவி மந்திரி பதவிகளை நீக்கிவிட வேண்டுமெனவும் அவர் டில்லி மாநில முதன் மந்திரிக்கு எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

ஆனாலும் பிரம்மப்பிரகாஷ் அவ்விரு உதவி மந்திரிகளையும் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கமாட்டாராம். அந்த உதவி மந்திரிகள் இருவருக்கும் வருடத்தில் ரூ 30,000 மட்டுமே செலவாகிறது. எனவே, அவர்களையும் தொடர்ந்து மந்திரி சபையிலேயே வைத்திருக்க வேண்டி மீண்டும் பண்டித நேருவுக்கு அவர் எழுதுவார் எனவும் தெரிகிறது.

இதற்கிடையில், தனக்கு, பண்டித நேரு 'தனது பார்வை—ரகசியம்' என எழுதி அனுப்பிய கடிதத்தைதான் நோக்குமுன்பே, பத்திரிகைகளில், கடிதத்தின் சாரம் பிரசுரமானது எப்படி? இப்படிச் செய்தி முன் கூட்டியே வெளியானதினால் சர்க்காரிடை பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, செய்தி எப்படி வெளியாயிற்று என்பதைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பண்டித நேருவுக்கு பிரம்மப்பிரகாஷ் ஆட்சேபணைக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளதாக அறிய வருகிறது.

ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

கொளத்தூர்

7—7—54 மாலை 7 மணிக்கு கொளத்தூர் கருணாநிதி சதுக்கத்தில் தோழர் எஸ். அப்பாவு தலைமையில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைப்பெற்றது. தலைவர் தனது உரையில் சமுதாய நிலைகுறித்தும், திராவிட நாடு பிரிவினை குறித்தும் பேசினார். பின்னர் தோழர் ஈ. வெ. கி சம்பத் புதிய கல்வித் திட்டம் ஒழிந்ததுபற்றி மகிழ்ச்சி தெரிவித்தும், அரசியல், பொருளாதார விடுதலை பற்றியும் பேசினார்.

மேச்சேரி

8—7—54 மாலை 7 மணிக்கு மேச்சேரி போலீஸ் ஸ்டேஷன் அருகில் தோழர் கோவிந்தசாமி தலைமையில், தி மு கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சின்னசாமி, ஈரோடு எஸ். அப்பாவு ஈ வே கி சம்பத் ஆகியவர்கள் தி. மு கழக கொள்கைகள் குறித்துப் பேசினர்.

நங்கவள்ளி

9—7—54 மாலை 7 மணிக்கு நங்கவள்ளி சிற்றரசு சதுக்கத்தில் தோழர் நடேசன் தலைமையில் தி. மு கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். இப்ராகிம் முக்கிய தீர்மானங்களை வாசித்து நிறைவேற்றினர். பின்னர் தோழர்கள் எஸ் அப்பாவு, ஈ. வெ கி சம்பத் ஆகியவர்கள் சமுதாய, அரசியல், பொருளாதார விடுதலை குறித்தும், நெசவாளர்கள் நிலை குறித்தும், பேசினர்.

தலாய்லாமா சீனு செல்கிறார்!

திபேத்தியர் எதிர்ப்பு

சீனத் துருப்புகள் அணிவகுக்கின்றன!

திபேத் நாட்டின் தலாய்லாமா ஜூலை 21-ந் தேதி சீனு செல்வார் என்று தெரிகிறது.

இவரது சீனப் பிரயாணம் பற்றி திபேத் நாட்டின் தேசிய சட்டசபைக் கலந்தாலோசிக்கப் படவில்லையாம்! தலாய்லாமா எவ்வளவு காலம் சீனுவில் தங்குவார் என்பதும் தெரியவில்லை.

இதுபற்றி பல திபேத்தியர்களிடையே கவலை நிலவுகிறதாம்! திபேத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் லாசா நோக்கி வருகின்றனர். ஷிகாட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

உங்களுக்குத் - - தெரியுமா?

★

கேள்விகள் :

1. இந்தியாவில் உணவுத் தானிய உற்பத்தி 1953—54-ம் ஆண்டிலேயே, ஐந்தாண்டுத் திட்ட லட்சிய அளவை மிஞ்சிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; ஐந்தாண்டுத் திட்ட லட்சிய அளவு 76 லட்சம் டன். 1953—54-ம் ஆண்டு உற்பத்தி இதைவிட எவ்வளவு டன் அதிகமாக இருக்கக்கூடும்?
   (அ) 10 லட்சம் டன்னு?
   (ஆ) 15 லட்சம் டன்னு?
   (இ) 20 லட்சம் டன்னு?

2. பெங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் ரயில் பெட்டி உற்பத்திசாலையில் எந்த வேகத்தில் ரயில் பெட்டிகள் உற்பத்தியாகி வருகின்றன?
   (அ) ஒரு நாளைக்கு ஒரு வண்டி வீதமா?
   (ஆ) இரண்டு நாட்களுக்கு ஒரு வண்டி வீதமா?
   (இ) ஐந்து நாட்களுக்கு ஒரு வண்டி வீதமா?

3. மேல்விலாசம் எழுதாமல் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் பல கடிதங்கள் தபாலில் போடப்பட்டு வருகின்றன. அத்தகைய கடிதங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் எவ்வளவு இருக்கும்?
   (அ) 200 கடிதங்கள்
   (ஆ) 350 „
   (இ) 500 „

4. மேற்கு வங்காளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மயூராக்ஷி நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் அதிகப்படியாக 4 லட்சம் டன் உணவுத் தானியம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் எந்த ஆண்டில் பூர்த்தியடைந்து பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்கும்?
   (அ) 1955-ம் ஆண்டிலா?
   (ஆ) 1957-ம் „
   (இ) 1959-ம் „

பதில்கள் :

1 (இ); 2 (ஆ); 3 (ஆ); 4 (எல்லாம் தப்பு இந்தத் திட்டம் ஏற்கெனவே பூர்த்தியாகி, பாசனத்துக்குத் தண்ணீர் சப்ளை செய்து வருகிறது)

பர்மாவில் பெண் கொள்ளைக்காரர்கள்!

20 வீடுகளைத் தீக்கிரையாக்கினர்

கரேனிய கலகக்காரர்களுக்கு கம்யூனிஸ்டுகள் உதவுகின்றனராம்!

பர்மாவிலுள்ள மூடன் நகரை 100-க்கு மேற்பட்ட கலகக்காரர்கள் கொள்ளையிட்டனர். அவர்களில் முப்பது பேர் பெண்கள் இப்பெண்களிடம் கைத்துப்பாக்கியும், தானே இயங்கும் பல போர்க் கருவிகளும் இருந்தனவாம்!

'மோன்' பெண்களான இவர்கள், ஸ்திரமாய் என்ற பெண்கள் தலைவியின் கீழுள்ள படையினர் என்று நம்பப்படுகிறது.

இக்கலகக்காரர்கள் மூடன் நகரைச் சுற்றியுள்ள பகுதியில் 20 வீடுகளைத் தீக்கிரையாக்கி, குடியிருப்போர் பொருள்களைக் கொள்ளையடித்தனர். மூடன் நகருக்கு 20 மைல் தூரத்திலுள்ள மோல்மீன் நகரிலிருந்து சர்க்கார் துருப்புகள் வருமுன்னரே இவர்கள் கொள்ளையை நடத்திவிட்டார்கள்; மூடன் மக்களில் இருவர் காயமுற்றனர்.

இதற்கிடையில் இரங்கூனுக்கு 7 மைல் வடக்கே ஹென்சாடா மாவட்டத்தில் கம்யூனிஸ்டு கலகக்காரர்கள் 100 பேரை சர்க்கார் இராணுவம் அரத்தியடித்து, அவர்களில் பெரும்பான்மையினரைக் கொன்றுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்க்காரால் அடக்கப்பட்ட கரேனிய கலகக்காரர்களுக்கு உதவி செய்து, அவர்களுக்கு ஊக்கமூட்ட கம்யூனிஸ்டுகள் முன் வந்தனர் என்றும், சர்க்கார் துருப்புகள் குண்டுமாரி பொழிந்து அவர்களில் 50 பேரை கொன்றனரென்றும் தெரிகிறது.

பர்மிய இராணுவம் இரண்டு கரேனியர்கள் பகுதியைத் தாக்கியதாம்.

சர்க்கார் துருப்புகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் கரேனியர்கள், கம்யூனிஸ்டுகளின் உதவியை நாடினார்களாம். இரண்டு நாள் போருக்குப் பின்னர் கரேனிய கலகக்காரர்களிடமிருந்து கேந்திர ஸ்தானங்கள் சர்க்கார் துருப்புகளிடம் சிக்கின என்று தெரிகிறது.

தூத்துக்குடி மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

4—7—54ல், தோழர் ஏ. எம் சாமி தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, ஆகஸ்ட் மாதம் 22-ந் தேதி மன்றத்தின் ஆண்டு விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது, நகரில் எம். எஸ். பி போலீசார் கைபாளும் கெடுபிடிகளை நிறுத்தும்படி முதலமைச்சரையும், இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் கேட்டுக் கொண்டும், எல் எல் பிள்ளை தெருவின் வடபகுதியில் பக்கிள் ஓடையின் பாலம் கட்டாமல் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் உடனடியாக பாலம் அமைத்துக் கொடுக்கும்படி நகர சபையைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மறுமலர்ச்சி மன்றம்

கடையநல்லூர் நகர தி. மு கழக உட்கிளையாக, முத்துக்கிருட்டிணபுரம் வட்டாரத்தில் மறுமலர்ச்சி மன்றம் திறப்பட்டு 9—7—54 இரவு 8 மணியளவில் ஐ கந்தசாமி தலைமையில் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. மன்ற நோக்கம் பற்றி தோழர்கள் பி. அன்பரசு, ப. புகழேந்தி, சி. நடராசன் பேசினர். பின்னர் நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:— செயலாளர்: மே. ஆதினப்; துணைச் செயலாளர்: சு. ச. பாண்டியன்; பொருளாளர்: மா. வெள்ளையன்: செயற்குழு உறுப்பினர்கள்: ச. வேலு, ச. ராமநாதன், வே. பழனிச்சாமி, மு. பரமசிவன்; ச. வேலாயுதம், நடராசன், ச. சுப்பையா, ச. குருசாமி, செ. சுப்பையா, மு. ராமசாமி, ச. தங்கையா, ரா. வேலுச்சாமி.

தென் பகுதி இரயில்வே மென் யூனியன் (கடலூர் கிளை)

10—7—54ல், இச் சங்க உள்ளிருப்புக் கூட்டம் தோழர் எஸ். இராகவானந்தம் தலைமையில் நடைபெற்றபோது, தொழிலாளர் தலைவர் டி. கிருட்டிணசாமியின் சேவையை தலைவர் பாராட்டிப் பேசினார். பின்னர், தலைவராக ஆர். குஞ்சிதபாதமும், துணைத் தலைவராக எம். பழனியாண்டியும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக கே. ஜி சீனிவாசன், முனுசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சின்னசேலம் ஊர்நல இளைஞர் கழகம்

4—7—54ல், பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் பெரியசாமி தலைமையில் மேற்படி கழகக் கூட்டம் நடைபெற்றபோது கழகத் தலைவர் ஏ அப்பாவிராம் பேசுகையில் கழகத்தில் சேர்ந்திருக்கும் 150 உறுப்பினர்களும் கட்டுப்பாடுடனும், ஒழுக்கத்துடனும் பொது நலத்திற்குப் பாடுபட வேண்டுமென்றார். மற்றும் பலர் பேசினர். இக்கழகப் பணிகளாவன:— மக்களுக்கு சுகாதாரத்தைப் பற்றி விளக்குதல்; தொத்து வியாதிகள் பரவ வொட்டாமல் தடுத்தல்; குடி தண்ணீர், போக்குவரத்து, வியாபாரம் இவைகளை மக்களுக்குத் தெரிவித்தல்; கல்வி விருத்தி செய்தல். வைத்திய சிகிச்சை விரைவில் கிடைக்கச் செய்தல்.

அனுதாபம்

மருதன்வாழ்வு நாரைக்கிணறு தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் மு. அ. நடராசன் 4—7—54ல் இயற்கை எய்தியமைக்கு தி மு கழகச் சார்பில், அவர்தம் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது—கழக அனுதாபமும் உரித்தாகுக (ஆர்)

உயர் நீதிமன்ற உத்தரவின்றி வழக்குத் தொடரலாகாது!

பெண் வழக்கறிஞருக்கு தாக்கீது

தொல்லை தரும் வழக்குகளைத் தடுக்க நடவடிக்கை

உயர்நீதி மன்ற உத்திரவின்றி சென்னை நகரிலோ, சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதி அனுமதியின்றி வெளியூர்களிலோ, சிவில், கிரிமினல் நடவடிக்கை எதையும் தொடுக்கக் கூடாதென்று சென்னை அட்வகேட் தோழியர் எம். ஏ. ஜானகி மீது பிரதம நீதிபதியும், நீதிபதி திரு. சோமசுந்தரமும் அடங்கிய பெஞ்சு உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோரி அட்வகேட்—ஜெனரல், உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு தொடுத்திருந்ததின் பேரில் நீதிபதிகள் மேற்படி உத்தரவை பிறப்பித்தனர்.

வெறும் தொந்திரவுகளைக் கொடுக்கக் கூடிய தாவாக்களைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதிகள் உத்தரவு பிறப்பிக்கையில் கூறியதாவது:—

"இது ஒரு அதிருஷ்ட வசமான வழக்காகும். ஆனால் பொது நலனை உத்தேசித்தும் நீதி சரியாகப் பரிபாலனம் செய்யப்பட வேண்டியதை உத்தேசித்தும் இவ்வுத்தரவை பிறப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. 20 ஆண்டுக் காலமாக வக்கீல் தொழில் நடத்தி வரும் இந்த அட்வகேட் (எம். ஜானகி) மீது இவ்வழக்கு ஏற்பட்டிருப்பது மிகவும் பரிதாபகரமான விஷயம். இந்த அட்வகேட்டின் மனம் சரியானபடி வேலை செய்யவில்லை என்று தோன்றுகிறது.

"பிரதிவாதி (தோழியர் ஜானகி) வீண் தொந்தரவுகளை தரக் கூடிய வழக்குகளைத் தொடர்ந்து வருகிறார் என்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் சொன்னால் போதும் என நினைக்கிறோம்.

"படித்த நவநாகரிக பெண்களைச் சட்ட விரோதமான முறையில் இழிவு படுத்தக்கூடிய ஒரு நாடகத்தை நடத்தியதாக சென்னையைச் சேர்ந்த ஒரு பிரபல நாடகக் கம்பெனி மீது ஒரு லட்ச ரூபாய் நஷ்டஈடு கோரும் வழக்கு தொடர அனுமதி கேட்டார்.

"மைசூர் அரச குடும்பத்தாராயிருந்த உடையார் குடும்பம், இழந்த பதவியைப் பெற தம் மூதாதையர்தான் உதவி புரிந்ததாகவும், அதற்காக தமக்கு ரூ 15 லட்சம் தரவேண்டுமென்று இந்திய சர்க்கார், சென்னை சர்க்கார், மைசூர் சர்க்கார் மீது வழக்கு தொடர நினைத்தார்.

"மூன்றாவதாக இந்தக் கோர்ட்டைச் சேர்ந்த வக்கீல் ஒருவர், அவருடைய பெண்ணுக்கு அனுமதியின்றி மறுமணம் திருமணம் செய்துவிட்டதாகவும், பெண்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் அரசியல் சட்டத்தில் இல்லையென்றும், எனவே, அந்த வக்கீல் ஒரு லட்சம் ரூபாய் தரவேண்டும் என்றும் பிரதிவாதி (தோழியர் ஜானகி) அந்த வக்கீல் மீது வழக்கு தொடர அனுமதி கேட்டார். இந்த வாதத்தில் எல்லாம் ஒரு அர்த்தமும் இல்லை"

"இதுபோன்ற வழக்குகளைத் தடுப்பதற்காகத்தான் உபத்திரவம் கொடுக்கக் கூடிய தாவாக்களைத் தடுக்கும் சட்டம் சென்னையில் பிறப்பிக்கப்பட்டது."

பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கம்

பொத்தனூர் இளைஞர் நாடக மன்றத்தில தோழர் இரா. சண்முகம் பி. ஏ, தலைமையில் வெற்றிலைத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டு, தோழர்கள் ஓ எம். கந்தசாமி தலைவராகவும், எஸ். கே. பரமசிவம் துணைத் தலைவராகவும், மலை. செகநாதன் செயலாளராகவும், ஜி. ஆறுமுகம் துணைச் செயலாளராகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் 13 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

* * *

15—6—54ல் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொத்தனூர் தி மு. கழகப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் மூலம் அமைக்கப்பட்ட வெற்றிலைத் தொழிற் குழுவை ஆதரிப்பதாகவும், அக்குழுவினருக்கு சங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கண்டு ஆவன செய்ய குழுவுக்கு சங்கம் முழு அதிகாரம் அளிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

6—4—54-ம் நாள் இதழ்த் தொடர்ச்சி	ரூ. 26,434—1—5
தோழர் என். எஸ். இளங்கோ மூலம்:	
திருவாரூர் தி மு. கழகம்	15—0—0
எட்டிமங்கலம் தி. மு. கழகம்	3—2—0
சென்னை பர்மா-ஷெல் தோழர்கள்—எஸ். ராமலிங்கம் மூலம்	13-12—0
கோவை மாவட்ட தி. மு. கழகங்கள்—தோழர் ஈ வெ கி. சம்பத் அவர்கள் மூலம் (விவரங்கள் முன்னர் அவ்வப்போது வெளியிடப்பட்டவைகளை கணிசபடி)	566—2—8
சென்னை-1 சி. எஸ். சுந்தரம்	2—0—0
வேப்பலோடை அ கு. அ திருமலையப்பன்	2—0—0
கல்லிப்பட்டி தி மு கழகத் தோழர்களும், திருமூர்த்தி மில்ஸ் தோழர்களும்	7—6—0
சாத்தான்குடி குமார், ராமசாமி, பால சுப்ரமணியம், ராமச்சந்திரன் ஆகியோர்	1—8—0
தஞ்சை மாநாட்டில் அண்ணா அவர்களிடம் கையொப்பம் வாங்கிய அன்பர்கள்	1—4—0
முக்கூடல் தி மு கழகச் செயலாளர் எம். எஸ். முத்துக்குட்டி அவர்கள் மூலம்:	
முக்கூடல் மா. சு. ராஜலிங்கம்	5—0—0
,, அருள்பாண்டிராஜ்	5—0—0
,, திராவிடர் செய்தி மன்றம்	8—0—0
,, ச. அப்பாவு	2—0—0
,, வெ. ரா. மாதவன்	1—0—0
,, மு ரா. நாராயணன்	1—0—0
,, ப வீராசாமி	1—0—0
,, உ சுப்புக்குட்டி, வெ முத்துக்குட்டி	0 12—0
கல்லிடைக்குறிச்சி தி மு கழகப் பொதுக் கூட்டத்தின்போது வசூல்	8-12—0
முக்கூடல் தி. மு கழகச் சார்பில் 22—2—54-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் சிறிய படம் ஏலம் போனதில்	6—0—0
ஷை பொதுக் கூட்டத்திலேயே பெரிய கைத்துக்குப் படம் ஏலம் போனதில்	31—0—0
அண்ணா படம் விற்றதில்	15—0—0
ஷை கூட்ட உண்டி வசூல்	6—7—0
மைலாப்பூர் வி. மாசிலாமணி	1—8—0
இந்தோ-சைனு (சைகோன) வாழ் தோழர்களான க. சேது, அ. சுந்தரர், சுப. கதிரேசன் ஆகிய அன்பர்களால் பல தோழர்களிடம் வசூலித்து அனுப்பப்பட்ட தொகை	189—0—0
சங்கரமல்லூர் நடராசன் மூலம்:	
,, எம். ரத்தினசபாபதி	2—0—0
,, கே. பி முனிரத்தினம்	1—0—0
,, என் ராமசாமி	1—0—0
,, கா. சீராமுலு	2—0—0
,, ப. கோவிந்தராசன்	2—0—0
,, மா. கண்ணப்பன்	1—0—0
,, கி. கோவிந்தராஜி	1—0—0
,, பெ. வெங்கடேசன்	1—0—0
,, நாராயணசாமி	1—0—0
,, சி. கோவிந்தராஜி	1—0—0
,, கோ. கிருஷ்ணசாமி	1—0—0
செங்கம்புணரி தி. மு கழகம்	1—9—8
திருக்கலப்பூர் கலைஞர் கலா மன்றம்	8—0—0
திருவிளையாட்டம் தி. மு. கழகம்	6—0—0
வளவனூர் தி. மு. கழகம் முன் கொடுத்த 100 ரூபாயுடன் சேர்த்துக் கொள்ளும்படி	1—0—0
வளவனூர் பொதுக் கூட்டத்தில் கையொப்பம் வாங்கிய அன்பர்கள்	0—9—0
சோழமாருப்பம் தி. மு கழகம்	6—2—0
இராமநாதபுரம் வெளிப்பட்டணம் தி. மு. கழகச் சார்பில் முகவை ஆர். எஸ். பாண்டியன் மூலம்	5—8—0
நிலையன்விளை அ. திருவடிமுத்து மூலம்:	
,, மா. இ. முத்து	5—0—0
,, ஆ. ந சுப்பையா	2—0—0
,, என். வி. பெருமாள்	1—0—0
,, என் சிவஞானம்	1—0—0
,, என். சுடலைமுத்து	1—8—0
,, என். கே சாமி	1—0—0
,, எம். என் முத்துசாமி	2—0—0
,, என். கே. வின்சென்ட்	1—0—0
,, ஆ ந. திருவடிமுத்து	8—0—0
,, கா. அ. மார்த்தாண்டம்	2—0—0
,, வா ராமமூர்த்தி	8—0—0
,, ஜி. பிரகாஸ்	1—0—0
,, ஏ எஸ். மார்த்தாண்டம்	1—0—0
,, ரா. கா. பிச்சையா	1—0—0
,, வா. தே. சண்முகம்	1—0—0
,, எஸ். பி மாரியப்பன்	1—0—0
,, வி. எஸ். வேலாயுதம்	1—0—0
,, ஆர். காளியப்பன்	1—0—0
வேப்பலோடை அ. கு. அ. திருமலையப்பன்	2—0—0
பம்பாய்-தாராவி கும் கும் சில்க் மில்ஸ் தோழர்கள் சி. பி. சிற்றரசு மூலம்	8—3—0
நெல்லை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் எஸ். வீரபாகு அவர்களால் வசூலிக்கப்பட்ட தொகையில் கிடைத்திருப்பது (டி. எம். ஓ மூலம்)	126—0—0
வேப்பலோடை அ. மு. அ. திருமலையப்பன்	2—0—0
எனங்குடி ஆர். ராஜசேகரன்	0-13—0
மேட்டுப்பாளையம் வி. சண்முகநாதன் அவர்களிடமிருந்து தோழர்கள் ஈ வெ. கி. சம்பத், என். அப்பாவு ஆகியவர்கள் கலந்துகொண்ட கூட்டங்களில் வசூலான தொகை	88-14—0
வேலூர்-ஆற்காடு ஆகிய ஊர்களில் வ. ஆ. மாவட்டத் தோழர்களால் அண்ணா அவர்களிடமும், ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களிடமும் கொடுத்த தொகை—நேரடியாக அனுமதித்து கணக்கில் இருந்தவை வரவு (விவரம் தனியாக வெளிவரும்)	387—2—6
ஆகமொத்தம் ரூ	27,893-15-10

திரு—கொச்சி மந்திரி சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிற பட்டம் தாணுப் பிள்ளை காங்கிரஸ் உறவுக்கு வழி காண முயற்சிவை வரவேற்கும் ம. சோ. குழுவின் தலைவராவர். உள்ளுக்குள்ளாகக் கிளம்பியுள்ள எதிர்ப்பை அவர் அலட்சியப்படுத்தி, மேலும் காங்கிரசுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர விடாது முயற்சிப்பாராளுல், ம. சோ. கட்சியில் பிளவு ஏற்படுவது நிச்சயம்.

இதற்கும் பட்டம் தாணுப் பிள்ளை, தம்மைத் தயாராகக் கொண்டிருக்கிறார் என்பதை வலியுறுத்தும் வகையில்: அவர் ம. சோ. கட்சிக்கு முழுக்குப் போட்டுவிட்டு, மீண்டும் பழையபடி காங்கிரஸ் கட்சியுடன் கலந்துவிடப் போகிறார் என்ற ஒரு செய்தியும் ஏற்கனவே வெளியாகி இருக்கிறது.

சொந்தக் கட்சியினர்களுக்குள்ளாகவும், சட்டசபையில் வகுத்தப்பட இருக்கிற நில சீர்திருத்த மசோதாவினால், பிளவு உண்டாகுமோ என அஞ்சப்படுகிறது. உத்தேச மசோதாவின் பிரிவுகள், தங்கள் பகுதி மக்களின் நில சீர்திருத்தக் கோரிக்கையை திருப்திபடுத்தும் முறையில் அமைந்திருக்கவில்லை என கொச்சி ம. சோ. கட்சி உறுப்பினர்கள் வருந்துகின்றனர்.

அதே காலத்தில், மேற்படி மசோதா மிகவும் 'புரட்சி'கரமானது எனவும், இக்கால கட்டத்தில் அத்தகு தீவிரமான நில சீர்திருத்தத்திற்கு நாட்டை உள்ளாக்கக்கூடாது எனவும், காங்கிரஸ் கட்சியினர் வருந்துகின்றனர்.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்பது கொச்சி ம. சோ. கட்சியினர் கருத்தாக இருக்கக்கூடும். அதனால்தான், உத்தேச மசோதா தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இல்லையே என வருந்துகின்றனர் போலும்!

மசோதா சட்டமாக்கப்பட்டு விட்டால் எங்கு அதனால் உருவாகிற 'அரசியல் மதிப்பு' பெறும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ எனவும், அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, எங்கு 'அரசியல் மதிப்பை' ம சோ. கட்சி கொள்முதல் செய்துவிடுகிறதோ எனவும், காங்கிரஸ் கட்சியினர் கருதியதினால்தான், பிரஸ்தாப மசோதா தீவிரமானதாயிருக்கிறது எனவே, அதற்கு ஆதரவு காட்டக் கூடாது எனக் காங்கிரஸ் வருந்துகிறது என யூகிக்க இடமேற்படுகிறது.

இதற்கிடையில், சந்தடி சாக்கில் கேட்டபடி வசந்தம் கொண்டாடவும் ம சோ. கட்சி மீது தான் கொண்டுள்ள தீராப் பகையை முடித்துக் கொள்ளவும் அமைச்சர் குழுவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை, இச் சட்ட சபை கூட்டத்திலேயே கொண்டுவர அரும்பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது.

மேற்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்க காங்கிரஸ் குழு தயாராக இல்லை அமைச்சர் குழுவை கவிழ்த்துவிட்டால், தங்கள் கட்சிக்கு அதனால் உடனடி இலாபம் ஒன்றும் கிடைக்காதே எனக் காங்கிரஸ் கவலையடைகிறது.

ஐக்கியக் கேரள ஏற்பாடு பற்றிய பிரச்னையும் ம. சோ. கட்சி அமைச்சர் குழுவிற்கு மண்டை இடியாக அமைந்திருக்கிறது. அக்கோரிக்கை தமக்கு உடன்பாடு அல்ல என்பதை மாநிலத் திருத்தக் குழுவிடம் கூறிவிட்டதாக, பட்டம் தாணுப் பிள்ளை வெளிப்படையாக நான்கைந்து நாட்களுக்கு முன்தான் அறிவித்திருக்கிறார்.

திரு—கொச்சி தமிழர் போராட்டமும், தாம் ஏவும் அடக்குமுறையும், அமைச்சர் குழுவிற்கு, மற்றோர் புயலாகக் கிளம்பி இருக்கிறது. இதில் ஒரு ஒழுங்கான முடிவுகாண அமைச்சர் குழு தவறிவிடுமானால், இதுவும் அமைச்சர் குழுவின் அஸ்தமனத்திற்கு ஏதுவாகி விடக்கூடும் என நம்பப்படுகிறது!

முதல் மந்திரி எனவே, பட்டம் தாணுப்பிள்ளை, மீண்டும் ஒரு முறை 'அரசியல் ஞானஸ்நானம்' பெற்று, ம. சோ. கட்சியில் உள்ள தம் சகாக்களுடன் காங்கிரசுக்குள் புகுந்து மறுமுறையும் காங்கிரஸ் நிலவும்படியும் நிலை பிறந்தாலும் பிறக்கக்கூடும். இம்மாற்றம் ஏற்பட்டால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இரண்டு நாளைக்குமுன் பண்டிதர் நேரு குறிப்பிட்டுள்ளது போல், 'மக்களின் தரத்துக்குத் தகுந்த ஆட்சிதான் அமையுமேயல்லாது தேவைப்படும் ஆட்சி அமைவதே அமையாது' என்ற உண்மையை, ஏற்கனவே திரு-கொச்சி அரசியல் நடைமுறை மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறது. ஒரு முறை திரும்பவும் அவ்வுண்மையை மெய்ப்பிக்கும் வாய்ப்பு, திரு-கொச்சிக்குக் கிடைக்கக் காத்துக் கொண்டிருக்கிறது!

இந்தச் சட்ட சபைக் கூட்டத்திலேயே, அவ்வாய்ப்பு ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது!

சென்னையில் ......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொடர்ந்து தோழர்கள் அரங்கண்ணல், கடிகமணி கவி நாராயணசாமி, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியபின் இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

தோழர்கள்: ச. பாலன், வி. முனுசாமி, டஞ்சாட்சரம், சந்திரமோகன், புரட்சிமணி, கரசிம்மன் முதலியோர் மாலைகளையும், கூட்டத்தையும் சிறப்புற முன்னின்று நடத்தினர்.

★

இராயபுரத்தில்

15—7—54 வியாழக் கிழமை மாலை 8-30 மணிக்கு சென்னை ராயபுரம் காசிமா நகர் டாக்டர் எம். நாராயணசாமி (பொன்மன்) அவர்கள் இல்லத்தில் தி. மு. கழக மும்முனைப் போராட்டத்தை நான் ஒத்தி வைத்த அப்பல்லவாணன் அவர்களால் தி. மு. கழகக் கொடி ஏற்றப்பட்டு (—ராயபுரப்) கல்லக்குடி போராட்டத்தைப் பற்றியும் ஆச்சாரியார் புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றியும், ரயில் நிறுத்தப் போராட்டத்தைப் பற்றியும், வெற்றி பெற்ற மகிழ்ச்சியை விளக்கி, டாக்டர் நாராயணசாமி, அம்பலவாணன், இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பம்பாய், சென்னை, சிங்கப்பூர் விமானப் போக்குவரத்து வெள்ளிக் கிழமையன்று ஆரம்பமாகிறது.

கழகக் கூட்டங்கள்

★

கூடவாசல்

திருக்குளம் வடகரையில் (கூட்டுறவு பண்டகசாலை எதிரில்)
17—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. கிருட்டிணமூர்த்தி
பேசுவோர்:
ஈ. வே. கி சம்பத்
எஸ். அப்பாவு

★

மாயூரம்

நகரப் பூங்காவில்
18—7—54 ஞாயிறு மாலை
தலைவர்: இரா. ஜோசப்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி, எம எல் ஏ
என். கிட்டப்பா

★

உறையூர்

டாக்கர் ரோடில்
18—7—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வே கி. சம்பத்
எஸ். அப்பாவு
எம். எஸ். மணி
மாலை 5 மணிக்கு மெயின் கார்ட் கேட்டிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்
18—7—54 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
கே. வி. கே. சாமி
பீ. சமதர்மம்
ஏ. சுப்பையா

★

திருச்சி

தேவர் மன்றத்தில்
18—7—54 ஞாயிறு மாலை
பேசுபவர்:
தூத்துக்குடி எஸ். நடராசன்

செம்பியம் 20-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

18—7—54 காலை 10 மணிக்கு கழக இல்லத்தில் (115, மார்க்கட் தெரு) பொது உறுப்பினர்கள் கூட்டமும், கழகத் துணைச் செயலாளர் தேர்தலும் நடைபெறும்.

கொடுங்கையூர் தி. மு. க. செ. கு. உறுப்பினர்கட்கு

18—7—54 காலை 9 மணிக்கு கழகப் பணி மனையில், தோழர் மு. கிருட்டிணமூர்த்தி தலைமையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பொள்ளாச்சி தாலுகா சிற்றூர் கிளை தி. மு. கழக செயலாளர்களுக்கு

18—7—54 மாலை 3 மணிக்கு தோழர் கே. என். திருமூர்த்தி, எம். சி அவர்களின் (பெரிய சக்கரத்துக்கு எதிரில் உள்ள) இல்லத்தில் பொள்ளாச்சி வட்டக் கிளைக் கூட்டம் நடைபெறும் எதிர்கால வேலைத் திட்டம் பற்றி ஆலோசித்து முடிவு செய்ய தாலுகாவிலுள்ள சிற்றூர் கிளைகளின் செயலாளர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறேன் என செயலாளர் அ. ச பாலு அறிவிக்கிறார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

18—7—54 காலை 10 மணிக்கு நெ. 17, சாகுலிருபகர் கோவில் தெரு, சென்னை, முத்தமிழ் மன்றத்தில் தோழர்கள் ச. பா. உத்தமன் தலைமையில் 'போராட்டம்' எனும் பொருள் பற்றி பலர் பேசுவர்.

உலக அரங்கில்

ஜினீவா:

இந்தோ—சீனப் பேச்சு வார்த்தைகளில் நல்லதோர் முடிவொன்று ஏற்பட்டு அடுத்த வாரம் ஒப்பந்தம் கையெழுத்தாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜார்ஜ்டவுன்:

சிறை நூல் நிலையத்தில் உள்ள புத்தகங்களைத் தவிர வேறு எந்தப் புத்தகங்களையும் வைத்திருக்கக்கூடாதென டாக்டர் ஜெகனுக்கும் அவரது தோழர்களுக்கும் சிறை அதிகாரிகள் எச்சரிக்கை விட்டிருக்கின்றனர். டாக்டர் ஜெகன் "மார்க்சிசமும், ஜனநாயகமும்" என்ற புத்தகத்தை வைத்திருப்பது கண்டுதான் சிறை அதிகாரிகள் இப்படி எச்சரித்தார்களாம்.

பாங்காக்:

தாய்லாந்தில் அமெரிக்க தூதுவரான டோனோவன் ஐசன்ஹோவரின் தென் கிழக்கு ஆசிய பிரச்சினைகளின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சீக்கிரமே வாஷிங்டன் சென்று பதவி ஏற்பார் என்று தெரிகிறது.

இரங்கூன்:

இந்தியாவில் உள்ள சமுதாய நலத் திட்டங்களை ஆராயவும் அதன் முன்னேற்றத்தை நேரில் பார்வையிடவும் நான்கு பேர் கொண்ட பர்மா சர்க்கார் குழு ஒன்று செப்டம்பரில் இந்தியா வருமென்று தெரிகிறது. இக்குழுவினர் இந்தியாவில் ஆறு வார காலம் தங்குவார்கள் என்று தெரிகிறது.

தெஹ்ரான்:

ஆங்கிலோ - ஈரானிய எண்ணைப் பிரச்சினையில் சீக்கிரம் ஒப்பந்தம் ஏற்படுமென பிரிட்டிஷ் பிரதிநிதி ஒருவர் கூறினார். பேச்சுவார்த்தைகளில் 12 நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டிருக்கிறார்களாம்.

குவாடிமாலா:

நியூவா, மெக்சிகோ, இத்தாலி ஆகிய நாடுகள் குவாடிமாலாவின் புதிய சர்க்காரை அங்கீகரித்துள்ளன.

கொழும்பு:

அடுத்த திங்களில் இலங்கையின் புதிய வர்த்தக அமைச்சர் ஹிர்லிகோரா தலைமையில் இந்தியாவுக்கு வர்த்தகக் குழு ஒன்று செல்லுமென்று தெரிகிறது, தேயிலை பற்றி எகிப்து, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் முக்கூட்டு ஒப்பந்தம் பற்றிப் பேசப்படுமாம்.

* * *

இலங்கையின் சென்ட்ரல் பாங்கின் கவர்னரான என். யூ. ஜெயவர்த்தன, அவரது மனைவி ஆகியோர் மீது நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்ய மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதியான கானகரட்னே, சில்வா, இலங்கை சர்வீஸ் கமிஷன் தலைவரான சசிக் ஜான்ஸ் ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்கள்.

ஜோகன்ஸ்பர்க்:

தென் ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ், தென் ஆப்பிரிக்காவில் காணப்படும் நிறவேற்றுமைக் கொள்கை பற்றி இந்திய காமன்வெல்த் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

லண்டன்:

பிரிட்டனில் சர்க்காரால் தேசிய மயமாக்கப்பட்டிருக்கும் தொழில்கள் காமன்ஸ் சபையின் குழு ஒன்றின் ஆராய்ப்படும் என்று தெரிகிறது. இத்தொழில்களின் தற்போதைய நிலை என்ன என்று இக்குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை தரும் என்று தெரிகிறது.

* * *

அரபு நாட்டின் எல்லைக்குள் விருந்த சர்க்கார் துருப்புகள் இஸ்ரேல் எல்லை கோக்கி சுட்டனர் என்றும் ஆனால் இஸ்ரேல் தரப்பில் யாருக்கும் சேதமில்லை என்று இஸ்ரேல் வானொலி அறிவித்தது.

ஹனோய்:

சிவப்பு நதிப் பிரதேசத்தில் பிரெஞ்சுத் துருப்புகள் 65 கிராமங்களின் துருப்புகளைக் கொன்றனர் என்று பிரெஞ்சு இராணுவ காரியாலயம் அறிவித்தது.

பெல்கிரேட்:

பால்கன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி யுகோஸ்லாவியா, துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் மாநாடு நடைபெற இருந்தது. துருக்கிப் பிரதமரின் உடல்நலக் குறைவால் இந்த மாநாடு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாம்.

கெய்ரோ:

கெய்ரோ, அலெக்சாண்டிரியா ஆகிய இரு நகரங்களிலும் உள்ள அமெரிக்க செய்தி இலாகா நூல் நிலையங்களில் ஒரே நேரத்தில் சிறு வெடிகுண்டுகள் வெடித்தனவாம். தீப்பற்றி 3,500 டாலர்கள் பெறுமான புத்தகங்கள் நாசமாயின என்று தெரிகிறது. இரண்டு குண்டுகள் வெடிக்காமல் அப்படியே கெய்ரோ நூல் நிலையத்தில் கிடந்தனவாம்.

தலாய்லாமா......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கபான்ட்சி, மாரி ஆகிய பகுதிகளின் பிரதிநிதிகள் தலாய்லாமாவைக் காண லாசா வந்திருக்கின்றனர். சீனாவிற்குச் செல்லவேண்டாமென்று தலாய்லாமாவை இவர்கள் கேட்டுக் கொண்டு மனு கொடுப்பார்கள் என்று தெரிகிறது.

இந்த நிலைமையை ஒட்டி ஏராளமான சீனத் துருப்புகள் திபேத்தின் தலைநகரான லாசாவை நோக்கி அணிவகுத்துச் செல்கின்றன. இத்துருப்புகள் பல இடங்களிலிருந்தும் செல்கின்றன.

சீன சர்க்காரின் அழைப்பின் பேரில் திபேதின் பஞ்சன் லாமாவும் அண்மையில் பீகிங் செல்கிறார்.

லாசா, கயாட்சே, ஷிகாட்சி ஆகிய சமவெளிகளில் சீனத் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இத்துருப்புகள் லாமாக்களை நாடுகடந்த பீகிங் அழைத்துச் செல்ல உதவும் என்று தெரிகிறது.

மும்முனைப் போராட்ட முழக்க நாள்

18—7—54 மாலை 6 மணிக்கு தி மு. க. பெரியமேட்டு கிளை 26-வது வட்டம் கழக பணிமனையில் தோழர் ச பாலன் தலைமையில் கொண்டாடப்படும்.

* * *

18—7—54 மாலை 5 மணிக்கு கழக (தி மு கழகம். ஆலந்தூர்) இல்லத்தில் கொண்டாடப்படும்.

திருவண்ணாமலை ஒன்றியத் தலைவர் தோழர் இரா. கெங்குசெழியன், எம். ஏ. அவர்கள் எழுதிய அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது (24, குளக்கரை செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.